**அனுப்புநர்**

தண்.வசுந்தராதேவி,
எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
அரசுத் தேர்வுகள்இயக்குநர்,
சென்னை– 600 006.

**பெறுநர்**

செய்திஆசிரியர்

**ந.க.எண். 262594/எச்.எஸ்.1/2017 நாள் : 30.05.2017**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6 – மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு, மார்ச் /ஏப்ரல் 2018 –விடைத்தாள் நகல்கள் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் – மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் – செய்திக் குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

மார்ச் /ஏப்ரல் 2018 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி விடைத்தாள் நகல்கோரி விண்ணப்பித்த மாணவர்களுக்கு விடைத்தாட்கள் நகலினை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்வது, மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக் குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதனை அனைத்து மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தங்கள் வானொலி / தொலைக்காட்சி / செய்தித்தாளில் செய்தியாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

‘‘இது விளம்பரம் அல்ல’’ எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

ஒம்/–

**இயக்குநர்**

**<u>இணைப்பு:</u>**செய்திக் குறிப்பு

## அரசுத் தேர்வுகள் இயக்ககம் , சென்னை– 600 006

## மார்ச் /ஏப்ரல் 2018,மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளல் மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்

## செய்திக் குறிப்பு

மார்ச் / ஏப்ரல் 2018, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி விடைத்தாட்களின் நகல்கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் **02.06.2018 அன்று பிற்பகல் 2.00 மணி** முதல் **scan.tndge.in** என்ற இணையதளத்திற்குச் சென்று தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்தபிறகு மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால் இதே இணையதள முகவரியில் Application for Retotalling / Revaluation என்ற தலைப்பினை Click செய்து தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.

இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, இரு நகல்கள் எடுத்து **04 .06.2018 முதல் 06.06.2018 வரையிலான தேதிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணிக்குள்** உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நாள்:** 30.05.2018
**இடம்:** சென்னை – 6